1969 ஆகஸ்ட் 19]

பயிர்கள் என்றும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஒருவித கட்டுப்பாடு கொண்டு வருவதுபற்றி சர்க்காரிடம் ஏதாவது திட்டம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப் பட்ட உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கேள்வி எண் 25 . . .

(திரு. ஹாண்டே அவர்களும், ஹாஜி பீர் முஹம்மது அவர்களும் தங்கள் இருக்கையில் எழுந்து நின்றார்கள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் நிறைய இருக்கின்றன. நேரமாகிறது. டாக்டர் ஹாண்டே, தங்களுக்கு இரண்டு துணைக் கேள்விகளுக்கு இடம் கொடுத்திருக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, just one more supplementary question please. I am the person who put the main question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியெல்லாம், இப்பொழுது விவசாயிகளுக்கு பல தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது பற்றித்தான். அப்படிப்பட்ட தொல்லைகள் காரணமாக, கொள்முதல் காரணமாக மட்டுமல்ல, வேறு பல தொல்லைகள் ஏற்பட்டிருப்பதன் காரணமாக, விவசாயிகள் இன்றைக்கு நெல் விவசாயத்தை கைவிட்டு, மற்ற 'காஷ் கிராப்ஸ்' பயிர் செய்யப்போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் உண்மை நிலைகளைக் கண்டு பிடிக்க அவர்களுக்கிருக்கும் குறைகளைக் கண்டு ஆராய, அரசாங்கம் ஒரு கமிட்டியை அமைத்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு இருக்கும் குறைகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது அதிகப்படியாக நெல் விவசாயத்தை விட்டுவிட்டு, கரும்புப் பயிருக்குச் செல்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அந்தக் காரணத்தால், இப்பொழுது அரசாங்கத்திற்கு அப்படிப் பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

Protein from leaves

* 25 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) Whether the Scientists of Chemistry section of the Agricultural College and Research Institute of Coimbatore have extracted portein from leaves of different plants; and

(*b*) whether this protein enriches the South Indian dishes like "Omapodi" and "Vadam" ?

[1969 ஆகஸ்ட் 19

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) ஆம்.

திரு. கே. விநாயகம் : இப்படி ஆராய்ச்சி செய்து இலைகளிலிருந்து 'ப்ரோடின்' சத்தை உட்கொள்ளும் பொருள்களோடு சேர்த்துக் கொள்ளலாம் என்பது லாபரடரி எக்ஸ்பெரிமெண்டாக இருக்கிறதா அல்லது கமர்ஷியல் பேஸிஸில் பொதுமக்கள் உபயோகிக்கும் அளவில் வியாபார அளவில் பயன்படுத்துகிறார்களா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான் இந்த நிறுவனத்திலிருந்து தக்க ஆராய்ச்சியின் மேல் கொடுக்கப்பட்டுள்ள தகவல். ஆனால், வியாபார அளவில் விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு இன்னும் வரவில்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, பலவித இலைகளிலிருந்து புரோடின் சத்து தயாரிப்பதை ஒரு பரீட்சார்த்த திட்டமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சில மாதங்களுக்கு முன் நெல்லிலிருந்து எரிபொருள், எண்ணெய் வகைகள் கிடைக்க முடியும் என்ற விஞ்ஞானக் கருத்தை பத்திரிகையில்—குறிப்பாக தினத்தந்தி பத்திரிகையில் பார்த்தேன். இந்த விஞ்ஞானக் கருத்துக்கள் அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இலையைப்பற்றித்தான் இப்போது கேள்வி. உறுப்பினர் அவர்கள் நெல்லிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களை தினத்தந்தியில் பார்த்ததாகச் சொல்கிறார். உறுப்பினர் அவர்கள் மீண்டும் தினத்தந்தியைப் பார்த்தால் இன்னும் பல விஞ்ஞானக் கருத்துக்கள் பிரசுரமாவதைப் பார்க்கலாம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மார்டின் அவர்களுக்கு கேள்வி கேட்க இடம் தருவதில்லையே என்ற குறை. அப்படி கேள்வி கேட்க இடம் கொடுத்தால், அவர் கேள்வியை விட்டு எங்கோ போய்விடுகிறார்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பருப்பு வகைகளிலிருந்து புரோடின் சத்து கிடைக்கிறது. மேலும் கிரை வகைகளிலிருந்து புரோடின் சத்து கிடைக்க தனியாக ஆராய்ச்சி செய்வது வேறு, மேலும், வேப்பிலையில்கூட புரோடின் சத்து இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகம் அவர்களுடைய கேள்வி இந்தப் புரதச் சத்தை ஓமப்பொடி வடாம் இவைகளில் சேர்த்து அதிகரிக்க வேண்டும் என்பதுதான்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : வேப்பம் பூவிலிருந்து வடாம் செய்வது எல்லாம் நிபுணர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படித் தயாரித்து, ஒரு சிறந்த விருந்து வைத்தால், அருந்துவதற்கு நாம் எல்லாம் தயாராக இருக்கிறோம்.

Beauty spots in the Nilgiris

*33 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state:

(a) Whether the Government have decided to maintain the beauty spots in the forest areas in the Nilgiris; and

(b) if so, the anticipated cost of such maintenance?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) நீலகிரி பிராந்தியத்தில் ஊராட்சி மன்றங்களின் நிர்வாகத்திலுள்ள அழகிடங்களை வனத்துறையின் பராமரிப்பில் மாற்றி, அத்துறை பராமரித்து வரவேண்டும் என்ற ஒரு வேண்டுகோள், நீலகிரி சுற்றுலா வளர்ச்சிக் குழுவால் அனுப்பப்பட்டது. அது ஆலோசனையில் இருக்கிறது. முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

(இ) பராமரிப்புக்கான செலவை முன்னதாகவே இப்பொழுது தீர்மானிக்க இயலாது; ஏனெனில் அவ்வப்போது எழும் தேவைக்கேற்ப ஒவ்வொரு இடத்திற்கும் செலவு வேறுபடும்.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, பொதுவாக, நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற மரம், செடிகொடிகள் அதிகமாக வெட்டி வீழ்த்தப்படுகிற காரணத்தில் இப்போது மழை பருவகாலத்தில் பெய்வதில்லை. ஆகவே, இந்தமாதிரி தவறான முறையில் மரங்களை வெட்டுகிற விவசாயிகளுக்கு அரசு உத்தரவு அனுப்பி அதைத் தடுக்க முன்வருமா? மரங்களை வெட்டாமல் பார்த்துக்கொள்ள அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இப்போதைய கேள்வி காட்சி நலன் கனிந்த இடங்களைப் பொறுத்தது. அழகிய இடங்கள்தான் சுற்றுலா மாளிகையாக, சுற்றுலா இடங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அதை அரசாங்கம் அழகு செய்து வருகிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீலகிரி மலையில் இருக்கின்ற எழில்பகுதிகளைப் போல ஜவ்வாது மலையிலும், ஏலகிரி மலையிலும், ஏற்காடு மலையிலும் பொதிகைமலையிலும் எழிற்பகுதிகள் நிறைய இருக்கின்றன. அத்தனை இடங்களையும் எழிற்பகுதி இடங்களாக மாற்றி, சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்கவும், தங்கி மகிழவும் ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சுற்றுலா பயணிகளின் வசதிகளுக்கேற்ற வகையில் பல அழகிய பகுதிகளை எடுத்து, மேலும் அழகுபடுத்தி ஏற்ற வசதிகளைச் செய்ய சுற்றுலா துறையினர் ஏற்பாடு செய்கிறார்கள்.